## குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், செஞ்சி

முன்னிலை: திரு.R.மனோகரன், B.A.,B.L.,
குற்றவியல் நீதித்துறை நடுவர், செஞ்சி.

**வழக்கு எண். C.C. 322 /2018**

2023 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 2 ம் தேதி வெள்ளிக் கிழமை குற்றம் முறையிடுபவரின் சார்பாக வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54 வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி. தவமணி Bench Clerk அவர்களால் உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

**அ.சா. 3**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : அலிஜான் | தொழில் | :கூலி |
| தந்தை பெயர் | : பாபு சாயுபு | சமயம் | : |
| கிராமம் | : மாவனந்தல் | சாதி | : |
| வட்டம் | : மேல்மலையனூர் | வயது | : 67 |

தேதி 02.06.2023

சாட்சியையும் எதிரியும் வளத்தி காவல் நிலையத்தின் நீதிமன்ற காவலர் திரு. சுரேந்தர் Gr.1- 2474 என்பவரால் அடையாளம் காட்டப்பட்டது.

**( 1 , 2 எதிரிகள் ஆஜர்)**

**முதல் விசாரணை**

**1.** நான் மாவனந்தல் கிராமத்தில் வசித்து வருகிறேன். அ.சா.1 அஜிராபீ , அ.சா.2 கவர்னர்பாஷா ஆகியோர்கள் என் வீட்டிற்கு பக்கத்தில்தான் உள்ளாகள். கவர்னர் பாஷாவின் அண்ணன்தான் ஆஜர் 1 ம்எதிரி.

2. கடந்த 2017 ம் ஆண்டு தேதி, மாதம் ஞாபகம் இல்லை. ஒரு நாள் பள்ளிவாசலில் தொழுகையை முடித்துவிட்டு 6.30 மணி அளவில் என் வீட்டை நோக்கி சென்கொண்டியருந்தபோது கவர்னர் பாஷா மனைவியை ஜான்பாஷா பாய் அடித்துபோட்டதாக சொல்லி மேல் மாடியில் இருந்து கவர்னர்பாஷாவின் மனைவியை தூக்கிகொண்டு இறங்கி வந்தார்கள். அப்போது நான் அங்கு இருந்தேன். பிறகு ஆம்பலன்ஸ் வர வைத்து கவர்னர்பாஷாவின் மனைவியை மருத்துவமணைக்கு அனுப்பி வைத்தார்கள். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்குவிசாரணை:**

**3.** கவர்னர்பாஷாவும், அவரது மனைவி ஹாஜிராபீ என் ஊர்க்காரர் எனக்கு தெரிந்தவர் என்றால் சரிதான். கவர்னர்பாஷாவின் ரைஸ்மில்லுக்கு பின்னாடி எனது வீடு உள்ளது என்றால் சரிதான். மந்தவெளியில் உள்ள பள்ளிவாசலுக்கு தொழுக போனேனா என்றால் ஆமாம். பள்ளி வாசலில் இருந்து என் வீட்டிற்கு வருவதற்கு குறுக்கு வழி உள்ளதா என்றால் இல்லை. 2017 ம் ஆண்டு V.M

பேரூந்தில் பஸ் டிரைவராக வேலை பார்த்தேனா என்றால் ஆமாம். 1.11.2017 ம் தேதியன்று மேற்படி பஸ்சில் டிரைவராக பணிபுரிந்தேனா என்றால் சரிதான். ரைஸ்மில் சத்தம் ஓவராக இருக்குமா என்றால் சத்தம் ஜாஸ்தி இல்லை. நான் பள்ளி வாசலில் இருந்து வந்துகொண்டியிருந்தபோது ஹாஜிராபீயை மாடியில் இருந்து தூக்கி கொண்டு வந்தார்களா என்றால் ஆமாம். அதற்கு முன்பாக மாடியில் என்ன நடந்தது என்று எனக்கு தெரியுமா என்றால் அது தெரியாது. மேல் மாடி செல்லும் படி செங்குத்தான படியாக உள்ளது என்றால் அவ்வாறு இல்லை.

4. மேல் வீட்டிற்கு கீழ் இருந்துதான் தண்ணீர் மேல் மாடிக்கு எடுத்துச்செல்வார்கள் என்றால் இல்லை. அவர்கள் மோட்டர் போட்டு மேல் வீட்டிற்கு தண்ணீர் எடுத்துக்கொள்வார்கள். மேல் மாடியில் முதல் வீட்டில் ஹஜிராபீயும் , அடுத்த வீடு காலியாகவும், அதற்கு அடுத்து 3 வதாக எதிரிகளும் குடியிருந்து வந்தார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. ஹாஜிராபீ மேல் மாடியில் குடியிருந்தார் என்பது மட்டும் தெரியும். சண்டை போட்டதை நேரில் பார்த்தேனா என்றால் இல்லை,. ரைஸ்மில் சம்மந்தமாக அவர்களுக்குள் பிரச்சனை இருந்து வந்தது தெரியுமா என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. ரைஸ் மில் சம்மந்தமாக பிரச்சனை இருப்பதாக போலிசாரிடம் சொன்னேனா என்றால் இல்லை. போலிசார் என்னை விசாரித்தார்களா என்றால் விசாரித்தார்கள். கவர்னர் பாஷாவிற்கு ஆதரவாக பொய் சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை முழுவதுமாக முடிக்கப்பட்டது.

**மறுவிசாரணை:**

இல்லை

என்னால்/என் முன்பாக பதியப்பட்டு,
சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/
படித்து காண்பிக்கப்பட்டு அது சரி
என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது.

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
செஞ்சி.

## குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், செஞ்சி

முன்னிலை: திரு.R.மனோகரன், B.A.,B.L.,
குற்றவியல் நீதித்துறை நடுவர், செஞ்சி.

**வழக்கு எண். C.C. 322 /2018**

2023 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 2 ம் தேதி வெள்ளிக் கிழமை குற்றம் முறையிடுபவரின் சார்பாக வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54 வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி. தவமணி Bench Clerk அவர்களால் உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

**அ.சா. 4**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : புருஷோத்தமன் | தொழில் | :சலூன் கடை |
| தந்தை பெயர் | : மணி | சமயம் | : |
| கிராமம் | : மாவனந்தல் | சாதி | : |
| வட்டம் | : மேல்மலையனூர் | வயது | : 39 |

தேதி 02.06.2023

சாட்சியையும் எதிரியும் வளத்தி காவல் நிலையத்தின் நீதிமன்ற காவலர் திரு. சுரேந்தர் Gr.1 - 2474 என்பவரால் அடையாளம் காட்டப்பட்டது.

**( 1, 2 எதிரிகள் ஆஜர்)**

**முதல் விசாரணை**

**1.** நான் மாவனந்தல் கிராமத்தில் வசித்து வருகிறேன். அ.சா.1 ஹாஜிராபீ , அ.சா.2 கவர்னர்பாஷா ஆகியோர்கள் என் கடைக்கு பக்கத்தில்தான் உள்ளாகள். எதிரிகள் தெரிந்தவர்கள். டீக் குடிக்க டீ கடைக்கு வருவார்கள்.

2. கடந்த 2017 ம் ஆண்டு தேதி, மாதம் ஞாபகம் இல்லை. ஒரு நாள் கவர்னர்பாஷாவின் மனைவியை ஜான் பாஷா அடித்துவிட்டார். நாங்கள் போய் பார்த்தோம். அப்போது கவர்னர்பாஷாவின் மனைவியை தூக்கிகொண்டு வந்து ஆம்பலன்ஸ்ல் மருத்துவமணைக்கு அழைத்துசென்றார்கள். போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**குறுக்குவிசாரணை**:

**3.** ரைஸ்மில்லுக்கு எதிரில் உள்ள கட்டிடத்தின் படியின் கீழ் நான் சலூன் கடை வைத்துள்ளேனா என்றால் ஆமாம். கேள்விபட்டுதான் சம்பவ இடத்திற்கு நான் வந்தேனா என்றால் ஆமாம். சம்பவம் எப்படி நடந்தது என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. சம்பவத்தை நேரடியாக நான் பார்க்கவில்லை என்றால் பார்க்கவில்லை. தூக்கிகொண்டு வந்ததை நான் பார்த்தேன்.

குறுக்கு விசாரணை முழுவதுமாக முடிக்கப்பட்டது.

**மறுவிசாரணை**:இல்லை

என்னால்/என் முன்பாக பதியப்பட்டு,
சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/
படித்து காண்பிக்கப்பட்டு அது சரி
என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது.

குற்றவியல் நீதித்துறை நடுவர், செஞ்சி

**குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், செஞ்சி**

முன்னிலை: திரு.R.மனோகரன், B.A.,B.L.,

குற்றவியல் நீதித்துறை நடுவர், செஞ்சி.

**வழக்கு எண். C.C. 322 /2018**

2023 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 2ம் தேதி வெள்ளிக் கிழமை குற்றம் முறையிடுபவரின் சார்பாக வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54 வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி. தவமணி Bench Clerk அவர்களால் உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

**அ.சா. 5**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : சுரேஷ் | தொழில் | : |
| தந்தை பெயர் | : வடிவேல் | சமயம் | : |
| கிராமம் | : நீலாம்பூண்டி | சாதி | : |
| வட்டம் | : மேல்மலையனூர் | வயது | : 34 |

தேதி 02.06.2023

சாட்சியையும் எதிரியும் வளத்தி காவல் நிலையத்தின் நீதிமன்ற காவலர் திரு. சுரேந்தர் Gr.1 - 2474 என்பவரால் அடையாளம் காட்டப்பட்டது.

**( 1 , 2 எதிரிகள் ஆஜர்)**

**முதல் விசாரணை**

**1.** நான் நீலாம்பூண்டி கிராமத்தில் வசித்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள 2வது கையொப்பம் என்னுடையதுதான். 2017 ம் ஆண்டு ரைஸ்மில்லில் சத்தம் கேட்டு அங்கு போனேன். ஆம்பலன்ஸ் வந்தது. வளத்தி போலிசார்கள் வந்து விசாரித்தார்கள். அப்போது போலிசார் என்னிடம் சாட்சி கையெழுத்து கேட்டார்கள் நான் கையொப்பம் செய்தேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**(2. 03.11.2017 தேதியிட்ட பார்வை மகசர் அ.சா.ஆ- 2 ஆக குறியிடுசெய்யப்படுகிறது.)**

**குறுக்குவிசாரணை:**

**3.** போலிசார் கேட்டுக்கொண்டதன் பேரில் நான் கையொப்பம் செய்தேனா என்றால் ஆமாம். சண்டை நடந்த அன்றே கையொப்பம் செய்தேனா என்றால் ஆமாம். நான் கையொப்பம் செய்த தாளில் என்ன எழுதியிருந்தது என்று தெரியுமா என்றால் தெரியாது.

குறுக்கு விசாரணை முழுவதுமாக முடிக்கப்பட்டது.

**மறுவிசாரணை**:இல்லை

என்னால்/என் முன்பாக பதியப்பட்டு,
சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/
படித்து காண்பிக்கப்பட்டு அது சரி
என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது.

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
செஞ்சி.